# பிரான்ஸ் குடியரசின் பாரிஸ் நகருக்கு பிரதமர் வருகை

ஜூலை 13, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி 13 ஜூலை 2023 அன்று மதியம் பாரிஸ் வந்தடைந்தார்.

2. விமான நிலையத்தில் பிரதமர் மோடியை பிரான்ஸ் பிரதமர் திருமதி எலிசபெத் போர்ன் சிறப்பான முறையில் வரவேற்றார். பிரதமர் மோடிக்கு சம்பிரதாய வரவேற்பும், மரியாதையும் அளிக்கப்பட்டது.

3. பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரானின் அழைப்பின் பேரில் பாஸ்டில் தின அணிவகுப்பில் கௌரவ விருந்தினராக பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இந்தியா-பிரான்ஸ் மூலோபாய கூட்டுறவின் 25வது ஆண்டு விழாவை இந்த விஜயம் குறிக்கிறது.

**பாரிஸ்**
**ஜூலை 13, 2023**